# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/32 - 2014 මැයි මස 27 වැනි අඟහරුවාදා - 2014.05.27

*1864/32 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 1/2011*

**2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2014, மே 27.*

ஒழுங்குவிதிகள்

*2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 8 ஆம் திகதிய 1770/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க புகையிலை உற்பத்திப் பொருட்கள் (சுட்டுத் துண்டிடல் மற்றும் பொதியிடல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*1. அதன் ஒழுங்குவிதி 5 இல் "சிகரெட்டைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் அச்சிடப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரு சிப்பம், பொதி அல்லது ஒரு அட்டைப் பெட்டியின் மொத்த இடப்பரப்பின் எண்பது (80%) சதவீதத்துக்கு குறையாத இடப்பரப்பினைக் கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சிகரெட்டைக் கொண்டிருக்கும் சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியின் முன்பக்கத்தினதும் பின் பக்கத்தினதும் மேற்புறப் பகுதியின் மீது அச்சிடப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு சிகரெட் சிப்பம், பொதி அல்லது அட்டைப் பெட்டியொன்றின் முன்பக்கத்தினதும் பின் பக்கத்தினதும் மேற்புறப் பகுதியின் அறுபது சதவீதத்துக்கு (60%) குறையாத பாகத்தினை மேவி இருத்தலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;*

*2. அதன் ஒழுங்குவிதி 6 இல் "அத்தகைய சிப்பம், பொதி, அட்டைப்பெட்டி அல்லது சுட்டுத் துண்டில் உள்ளடங்கியுள்ள புகையிலை உற்பத்திப் பொருளின் இயைபான ஆக்கக்கூறுகள் மற்றும் வெளியேற்றுகைகள், போர்மல்ட்டிஹைட் மற்றும் வேறு நச்சுப் பொருட்கள் ஏதேனும் இருப்பின், அவை உள்ளடங்கலாக அச்சிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய சிப்பம், பொதி, அட்டைப் பெட்டி அல்லது சுட்டுத்துண்டில் அத்தகைய உற்பத்திப் பொருளின் நிக்கொட்டின் மற்றும் தார் உள்ளீடு என்பவற்றை அச்சிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;*

3. அதன் ஒழுங்குவிதி 7 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக :-

"7. ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு சிப்பம், பொதி, அட்டைப் பெட்டி அல்லது சுட்டுத்துண்டின் மீதும் அதன் உற்பத்தியின் திகதி, மாதம் மற்றும் ஆண்டு என்பன அச்சிடப்படுதல் வேண்டும்." ;

4. அதன் ஒழுங்குவிதி 10 இனை அடுத்து பின்வரும் ஒழுங்குவிதியை புதிய ஒழுங்குவிதியாக சேர்ப்பதன் மூலமும் :-

"11. ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு இறக்குமதியாளரும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க ஒட்டிகளை (ஸ்ரிக்கர்) ஒட்டுவதன் மூலம் இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்."

5. 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தின் 15 ஆந் திகதியிடப்பட்ட 1797/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலும், 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தின் 8 ஆந் திகதியிடப்பட்ட 1783/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருட்கள் (சுட்டுத்துண்டிடல் மற்றும் பொதியிடல்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

6. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் யூலை மாதம் 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

6- 270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.